# "நல்ல வேலை எது என்பதைப் பரந்த பார்வையில் தீர்மானிக்க வேண்டும்" - துணைப்பிரதமர் வோங்

***Seithi Mediacorp, 16 January 2023***

சிங்கப்பூர் ஊழியர்கள், நல்ல வேலை எது என்பதைப் பரந்த பார்வையில் தீர்மானிக்க வேண்டுமெனத் துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் (Lawrence Wong) கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கல்வித் தகுதிக்கு மிதமிஞ்சிய முக்கியத்துவம் அளிப்பதைக் கைவிட்டு, திறன்களையும் தனிப்பட்ட திறமையையும் அங்கீகரிக்குமாறு அவர் வலியுறுத்தினார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய சிங்கப்பூர்க் கண்ணோட்டக் கருத்தரங்கில் அவர் பேசினார்.

திறன்மேம்பாடு என்னும் அம்சத்தைத் தொழில்-துறைகள் அனைத்தும் மறுஆய்வு செய்ய வேண்டுமெனத் திரு. வோங் கேட்டுக்கொண்டார்.

ஊழியர்களை ஈர்த்து, தக்கவைத்துக் கொள்ளவும் அவர்களுக்குப் பொருத்தமான வெகுமதி அளிக்கவும் தேவையான வழிகளைக் கண்டறிய அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஊழியர் சந்தையை மாற்றியமைப்பது மட்டும் போதாது; வேலை குறித்த நமது கண்ணோட்டத்திலும் மாற்றம் ஏற்பட வேண்டுமென்றார் திரு. வோங்.

வேலையில் சேரும்போது இருந்த தகுதியை மட்டும் வைத்து ஊழியர்களின் முன்னேற்றத்தை நியாயமற்ற வகையில் தாமதப்படுத்தக் கூடாது என்றும் அவர் சொன்னார்.